[1995 ஏப்ரல் 18

பிற்பகல் 1–30

8. 10-4-1995 அன்று பிரைவேட் வீடியோகிராபரை காமிராசகிதம் அவை வளாகத்திற்குள் அனுமதியின்றி அழைத்து வந்தது குறித்து-பேரவைத் தலைவரின் அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடந்த 10–ஆம் தேதி பேரவையில் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் நடந்துகொண்ட சில முறைகள் பற்றி நான் பேரவையில் தெரிவிக்கிறபோது, அசம்பாவிதமான ஒரு சூழ்நிலையை இங்கே உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்கள் வந்தார்கள் என்பதற்கு, வெளியில் அவர்களுடைய அறையில் தொலைக்காட்சி நிலையத்தினர் தொலைக்காட்சி கருவிகளை எல்லாம் கொண்டு வந்து, வைத்துக்கொண்டு, வீடியோ ஆப்பரேட்டர்ஸை எல்லாம் தயாராக வைத்துக்கொண்டு இங்கே வந்தார்கள் என்கிற செய்தியைச் சொல்லி இருந்தேன். அது தொடர்பாக தொலைக்காட்சி நிலையத்தினர், 'எங்களில் யாரும் அவ்வாறு வீடியோ கேமராவோடு பேரவைக்குள்ளே வரவில்லை' என்கிற செய்தியை எனக்குத் தெரிவித்து இருந்தார்கள். அதுபற்றி முழுமையாக விசாரித்தபோது, தொலைக்காட்சியினர் அவ்வாறு வரவில்லை; ஆனால் இவர்கள் ஏற்பாடு செய்த ஒரு பிரைவேட் வீடியோகிராபர், பன்னீர்செல்வம் என்கிறவர் வந்திருக்கிறார்; அவர்தான் அந்த நேரத்தில் காவலர்களாலே இங்கேயிருந்து வெளியேற்றப்பட்டிருந்திருக்கிறார். அது இன்னும் நான் சொன்ன வாதத்தை ஊர்ஜிதப்படுத்துகிற நிலைமை. தொலைக்காட்சியினரே வந்திருந்தாலும்கூட, அவர்கள் ஏதோ இவர்கள் அழைத்திருக்கிறார்கள், அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று இருந்திருக்கும். இவர்களே, திட்டமிட்டு, தயாரித்து ஒரு பிரைவேட் வீடியோகிராபரைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது, அன்றைக்கு நான் சொன்ன குற்றச்சாட்டை ஊர்ஜிதப்படுத்துகிற வகையில்தான் இருக்கிறது. இருந்தாலும் தொலைக்காட்சியினர் வந்தார்கள் என்று நான் இங்கே தெரிவித்த கருத்து என்பது--அந்த நேரத்தில் அவையில் இருந்த என்னிடத்தில் இவ்வாறு பன்னீர்செல்வம் என்கிறவர் ஒரு டி.வி.காரர் என்று சொன்னதை வைத்து தொலைக்காட்சியினர் என்று நான் அவைக்கு தெரிவித்தேன்– –அது தவறான தகவல். தவறுக்காக வருந்துகிறேன். இதைப்போல தொலைக்காட்சியினரும் நடந்து கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். தொலைக்காட்சியினர்

வரவில்லை என்பதை நான் இவ்வளவு பெருந்தன்மையோடு இங்கே தெரிவிக்கிறேன். அதைப்போல இந்த பேரவைச் செய்திகளை வெளியிடுகிற தொலைக்காட்சியினர் அதே பெருந்தன்மையோடு நடந்து கொள்வார்களேயானால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரைவேட் தொலைக்காட்சியினர் கூட உங்களுடைய அனுமதியோடு தான் சட்டமன்ற வளாகத்திற்குள் வர வேண்டுமென்று விதி இருக்கிறபோது அந்த பிரைவேட் தொலைக்காட்சியினர் வந்ததற்காக நீங்கள் அவர்களுக்கு தண்டனை வழங்கி, இனிமேல் அப்படிப்பட்டவர்கள் யாரும் வராமல் இருப்பதற்காக முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அன்றைக்கே கூட சொல்லி இருக்கிறேன். அவர்களை அப்புறப்படுத்தி இருக்கிறேன். அதுதான் அன்றைக்கு இருக்கிற தண்டனை அவர்களுக்கு. இந்த வளாகத்தை விட்டு அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இனிமேல் தொடர்ந்து செய்வார்களேயானால்--எய்தவர்கள் இருக்க அம்பை நொந்து என்ன பயன்?--எய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கையை எடுப்போம்.

7. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) **கோரிக்கை எண் 35--பாசனம்**

(ஆ) **கோரிக்கை எண் 36--பொதுப்பணிகள் - கட்டிடங்கள்**

(இ) **கோரிக்கை எண் 37--பொதுப்பணிகள் பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்.**

(ஈ) **கோரிக்கை எண்--38-- சாலைகளும், பாலங்களும்**

(உ) **கோரிக்கை எண்--54-- பாசனம் குறித்த மூலதனச் செலவு**

(ஊ) **கோரிக்கை எண் 55-- பொதுப் பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.**

(எ) **கோரிக்கை எண் 56--சாலைகள்--பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.**